# திராவிடப் போராளிகள் 20

■ வழக்கறிஞர் அருள்மொழி

**மறைக்கப்பட்ட பங்களிப்பு, மறக்கப்பட்ட தியாகம், மறுக்கப்பட்ட அங்கீகாரம் என இந்திய வரலாறு நெடுகிலும் குறைந்தபட்சம் அடிக்குறிப்பாகக் கூட இல்லாமல் போன திராவிட இயக்க வீராங்கனைகள் எத்தனையோ பேர். அவர்களைப் பற்றி, திராவிட இயக்கம் மட்டுமே பதிவு செய்துள்ளது. இது அத்தகைய தியாகச் சுடர்களை அடையாளம் காட்டும் தொடர்...**

## சுயமரியாதை... அதுவே கொள்கையும் குடும்பமும்!

ஓவியம் : ரவிபேலட்



கருத்தொருமித்த இருவர் மணவாழ்வில் இணைவதற்கு ஆயிரம் தடைகளை உருவாக்கும் ஆணாதிக்க, சாதி அமைப்பில், மஞ்சுளாபாய், வை.சு.சண்முகம் அவர்களைத் திருமணம் செய்தது பற்றி அவரே கூறுகிறார்:

“கொள்கையால் ஒன்றுபட்டிருந்த நாங்கள் இருவரும், நீண்ட நேரம் நன்கு சிந்தித்து வாழ்க்கையிலும் ஒன்றுபடுவது என்று முடிவு செய்தோம். நீதிக்கட்சிப் பிரமுகர் திருவாளர் சவுந்தர பாண்டியன் முன்னிலையில் மதுரையில் எங்களுக்குப் பதிவுத் திருமணம் நடைபெற்றது”.

வை.சு.சண்முகம் அவர்கள் பிறந்த சமூகத்தில் அவ்வளவு எளிமையாக நடந்த முதல் பதிவுத் திருமணம் இதுவாகத்தான் இருக்க வேண்டும். மற்றொரு செய்தியும் இங்கே நினைவு கூரத்தக்கது. நீலாவதி-இராமசுப்ரமணியம் ஆகியோரின் சாதி மறுப்புத் திருமணத்தை எதிர்த்து நகரத்தார் சமூகத்தின் சிவநேயக் கூட்டத்தார் நின்றபோது, மணமக்களுக்கு வரவேற்பும் விருந்தும் அளித்து அத்திருமணத்தை அனைவரும் ஏற்றுக்கொள்ளச் செய்தவர் வை.சு. சண்முகம். அவர்கள் தங்குவதற்கு தன் கொடைக்கானல் பங்களாவைக் கொடுத்தவர் டபிள்யு.பி.ஏ.சவுந்தரபாண்டியனார். பிறகு பாதுகாப்புக்காக அவர்கள் தந்தை பெரியாரின் இல்லத்திலேயே தங்க வைக்கப்பட்டார்கள்.

### கொள்கை உறவே குடும்ப உறவு!

**‘செல்வர்க்கு அழகு செழுங்கிளை தாங்குதல்’** என்கிறது நறுந்தொகை. திராவிடப் போராளிகளுக்குக் கொள்கை உறவே குடும்ப உறவாகவும் அமைந்தது. திராவிட இயக்கம் இன்றும் கொள்கைக் குடும்பமாக விளங்குவதற்கு ‘சுயமரியாதை இயக்கம்’ அமைத்த இந்த அடித்தளம்தான் காரணம்.

அதன் இன்னொரு பரிமாணத்தை பாவேந்தர் பாரதிதாசன் அவர்களைத் தன் தமையனாகக் கண்ட மஞ்சுளாபாயும் அவரைத் தன் தங்கையாகவே ஏற்றுக்கொண்ட புரட்சிக்கவிஞரும், கவிஞரின் புரவலராக வாழ்ந்த வை.சு.ச அய்யாவும் ஒருவருக்கொருவர் காட்டிய அன்பில் காணலாம்.

“பாவேந்தர் பாடல்களில் எனக்கு இளமையிலிருந்தே ஈடுபாடு அதிகம். என் கணவர் ஏற்கெனவே பாரதியாரோடு நெருங்கிய தொடர்பு கொண்டவர். இலக்கியப்பற்று மிக்கவர். எனவே, சுயமரியாதை இயக்கத்தின் இதயக்குரலாக, சங்கநாதமாக விளங்கிய பாவேந்தர் தொடர்பு, எங்கள் குடும்பத்திற்கு இன்றியமையாததாகிவிட்டது. தென்தமிழ்நாட்டிற்கு வந்தால், இன்பநிலையமே அந்தப் புதுவைச் சிறுத்தையின் பாசறையாக விளங்கும்” என்று மஞ்சுளாபாய் அம்மையார் எழுதினார் .

### அன்புமிக்க அத்தை

வை.சு.சண்முகம் அவர்களின் துணையால் ‘முத்தமிழ் நிலையம்’ என்ற அமைப்பை உருவாக்கி, இரவு முழுவதும் பாவேந்தரின் பாடல்களை இசையாகவும் கவிதையாகவும் நாடகமாகவும் நிகழ்த்தச் செய்தார். அதுமட்டுமல்ல. புரட்சிக் கவிஞரின் குடும்ப நிகழ்ச்சிகள் அனைத்திலும் மஞ்சுளாபாய் பாசமும் பொறுப்பும் உள்ள தங்கையாகவே செயல்பட்டார்.

அதற்குச் சிறந்த சான்று புரட்சிக்கவிஞரின் மூத்தமகள் சரசுவதியின் திருமணத்துக்கு வை.சு.ச.வின் துணையோடு கரூர் அருகில் கட்டிப்பாளையம் என்ற ஊரைச் சேர்ந்த கண்ணப்பர் என்ற மாப்பிள்ளையைப் பார்த்துப் பேசி திருமணச் செலவையும் வை.சு.ச. அவர்களையே ஏற்றுக்கொள்ளச் செய்தார் மஞ்சுளாபாய். இதனை புரட்சிக்கவிஞரின் மகள் சரசுவதி அவர்களே பதிவு செய்துள்ளார்.

“21.1.44 இல் எனக்கும் புலவர் கண்ணப்பனாருக்கும் திருச்சிராப்பள்ளியில் பதிவுத்திருமணம் நடந்தது. 22.1.44 ஆம் நாள் காலை ஒன்பது மணிக்கு பெரியார் முன்னிலையில் பாராட்டுக் கூட்டம் கட்டிப்பாளையத்தில் நடைபெற்றது.

என் திருமணம் நடைபெறப் பெரிதும் முயற்சி எடுத்துக் கொண்டு உறுதுணையாக இருந்தவர்கள் கானாடுகாத்தான் தனவணிகர் வை.சு.சண்முகம் செட்டியாரும் அவரது துணைவியாரான மஞ்சுளாபாய் அம்மையாரும் ஆவர். அவரை எங்கள் குடும்பத்தின் ஓர் அங்கமாக்கி ‘அத்தை’ என்று அன்போடு அழைப்பது வழக்கம். திருமதி மஞ்சுளாபாய் அவர்களே மாப்பிள்ளை பார்த்துவிட்டு, ஒருநாள் புதுச்சேரி வந்தார். அவரே ஒட்டடை அடித்து, வீட்டைத் தூய்மை செய்தார். பெண் பார்க்கும் படலத்தை உடனிருந்து நடத்தினார்...”

### மூவேந்தர் சின்னமே தாலி

பாவேந்தர் மகள் இன்னொரு சுவையான செய்தியையும் கூறுகிறார்.

“பெரியாரைப் பின்பற்றும் தன்மான இயக்கத் தோழர்கள் சடங்குத் திருமணத்தை எதிர்ப்பவர்கள். ஆண் பெண் சமத்துவத்தை வலியுறுத்திப் பேசிய பெரியார் ‘தாலி பெண்ணுக்குப் பூட்டப்படும் அடிமைச்சாசனம்’ என்று அடிக்கடி குறிப்பிடுவார். அதனால், எனது திருமணப்பேச்சு நடைபெற்றபோது தாலி அணிவதற்கு எதிர்ப்புத் தெரிவித்தேன்! பிறகு **‘புலி-வில்-கயல்’** பொறித்த மூவேந்தர் சின்னத்தை தங்கத்தால் செய்து அணிவித்தார்கள்”.

**“பெரியாரைப் பின்பற்றும் தன்மான இயக்கத் தோழர்கள் சடங்குத் திருமணத்தை எதிர்ப்பவர்கள். ஆண் பெண் சமத்துவத்தை வலியுறுத்திப் பேசிய பெரியார் ‘தாலி பெண்ணுக்குப் பூட்டப்படும் அடிமைச்சாசனம்!’**

பதிவுத் திருமணம் திருச்சியிலும் மணமக்களுக்கு வரவேற்பு, பாராட்டுக் கூட்டம் ஆகியவை கட்டிப்பாளையத்திலும் நடைபெற்றன. சேலம் நகராட்சிக் கல்லூரியின் முதல்வர் இராமசாமி கவுண்டர் தலைமையில் பெரியாரும் பேரறிஞர் அண்ணாவும் இன்னும் பல தலைவர்களும் வாழ்த்துரைத்தனர். இந்தத் திருமணத்துக்கு அழைப்பிதழை வழங்கியவர் பெரியார். அவர் பெயருடன் வை.சு.மஞ்சுளாபாய் ஆகியோரின் பெயர்களும் அச்சிடப்பட்டுள்ளன.

ஒரு திருமணத்துக்கு வருமாறு இணைந்து அழைக்கும் ஆணும் பெண்ணும் கணவன் மனைவியாக இருக்க வேண்டிய அவசியமில்லை . மணமக்களின் பெற்றோர் அல்லது உறவினர்களாகத்தான் இருக்க வேண்டும் எனக் கட்டாயமும் இல்லை என்பதைச் செயலில் காட்டியுள்ளனர் நம் தலைவர்கள்.

இத்திருமணத்தில் பல புதுமைகள் நடந்துள்ளன. முதன்முறையாக தாலிச் சின்னத்துக்குப் பதிலாக மூவேந்தர் கொடிகளைக் குறிக்கும் மீன்-புலி-வில் சின்னம் பொறித்த அணி மணமகளுக்கு அணிவிக்கப்பட்டது.

### சுயமரியாதை வாழ்வே சுகவாழ்வு

பெண்ணுரிமைக் கொள்கையை வாழ்வில் எப்போதும் விட்டுக் கொடுக்காத வீராங்கனை மஞ்சுளாபாய் என்பதை நினைவூட்டும் மற்றொரு முக்கியமான செய்தி உண்டு. செட்டி நாட்டின் சீர்திருத்தச் செம்மலாக வாழ்ந்த வை.சு.ச அவர்கள் தன் சொத்துக்கள் தொடர்பான வழக்குகளை விடாமல் நடத்தியதில் ஏற்பட்ட இழப்பினால் சற்று நிலைதடுமாறினார். மனிதர்கள் துயருறும் காலத்தைத் தங்கள் பிழைப்புக்கான வாய்ப்பாகக் கொள்ளும் சோதிடர்களும் சாமியார்களும் அவர்கள் வீட்டிற்கு வரத்தொடங்கினர். மஞ்சுளாபாயின் பகுத்தறிவு உள்ளம் பதைபதைக்கத் தொடங்கியது. மஞ்சுளாபாய் எழுதினார்.

“10 லட்சம் ரூபாய் அளவுக்கு வரவேண்டிய செல்வம் வழக்கின் காரணமாகத் தடைப்பட்டுக் கிடந்தது. வை.சு.ச அமைதியிழந்தார். அடிக்கடி சீற்றத்துக்கு ஆளானார். அவர் கடைப்பிடித்து வந்த சீர்திருத்தக் கருத்துகளும் ஆட்டம் கண்டன. பகுத்தறிவுவாதிகள் தங்கியிருந்த இன்ப நிலையம் சாமியார்களுக்கு இடம் கொடுத்தது. சாமியார்களுக்கு ஏற்ப, சமைக்கும்படி என்னை என் கணவர் வற்புறுத்தியதால் நான் அவர்பால் கருத்து வேறுபாடு கொண்டு புதுவைக்குச் சென்றேன்.”

பகுத்தறிவுக் கொள்கையை உளப்பூர்வமாகப் புரிந்து ஏற்றுக் கொண்ட பெண்கள் ‘சுயமரியாதை வாழ்வே சுகவாழ்வு’ என்ற தத்துவத்தில் இருந்து விலகுவதில்லை. சுயமரியாதைக்கு விலையாக எந்தச் சமரசமும் அவர்களைச் சமாதானப்படுத்தாது என்பதற்கு இந்த நிகழ்வே சாட்சி. மேலும் ‘பாவேந்தரின் இல்லமே தனது தாய்வீடு’ என்ற அவரது உணர்வும் இந்நிகழ்வில் வெளிப்பட்டது. பின்னர் வை.சு.ச அவர்கள் ‘குழந்தைகளுக்கு அம்மை கண்டுள்ளது’ என்று கடிதம் வந்தவுடன் கானாடு காத்தானுக்குத் திரும்பினார்.

பொருளாதாரச் சுழலில் சிக்கிய வை.சு.ச அவர்களால் அதிலிருந்து மீளமுடியவில்லை. இன்ப மாளிகையும் வழக்கால் பறிபோனது . வை.சு.ச 1962-ஆம் ஆண்டு காலமானார். அதன்பின் மஞ்சுளாபாய் அவர்கள் திருச்சி பெரியார் மாளிகையில் செயல்பட்டு வந்த மகளிருக்கான நாகம்மையார் பெண்கள் இல்லத்தின் காப்பாளராக சில ஆண்டுகள் பணியாற்றினார்.

அவர் எழுதிய இறுதிக் கட்டுரையில் காணப்படும் இந்த செய்திகளைத் தவிர, அவரது இறுதிக்காலம் பற்றிய பதிவுகள் கிடைக்கவில்லை.

(வருவார்கள்...)

---

## கவனத்தைத் திசை திருப்பி...

வாட்ஸ்அப் வதந்திகளை வரலாறு என திரித்து, புதிய நாடாளுமன்ற வளாகத்தில் செங்கோல் நிறுவி இருக்கின்றனர். தமிழ்நாட்டிலிருந்து சென்ற ‘ஆன்மிக அடையாளம்’ என சிலர் பெருமை கொள்கின்றனர். அதைத் தொடர்ந்து பேசவும் செய்கின்றனர். தமிழ்நாட்டு மக்களின் கவனத்தைத் திசை திருப்பிய அதேநேரத்தில், தமிழ்நாட்டு மருத்துவ மாணவர் சேர்க்கையில் சில நெருக்கடிகளை உருவாக்கி இருக்கிறது ஒன்றிய அரசு.

சென்னை மாநகரின் மருத்துவ சேவைகளில் மிக முக்கிய மையமான ஸ்டான்லி அரசு மருத்துவக் கல்லூரியில் சில குறைகள் உள்ளதாகவும், அதனால் அதன் அங்கீகாரம் ரத்து செய்யப்படும் எனவும் தகவல்கள் வெளியாகின. தவிர, திருச்சி, தர்மபுரி மருத்துவக் கல்லூரிகளின் அங்கீகாரமும் ரத்து செய்யப்படும் எனவும் வெளியானது. சில சாதாரண காரணங்களுக்காக, அங்கீகாரம் ரத்து என்கிற அறிவிப்புகள் எல்லாம் தமிழ்நாட்டின் மருத்துவக் கட்டமைப்பு மீது காட்டப்படும் பாரபட்சம். ஆனால், இதை உணர்ந்து உணர்வு கொள்வதைத் தடுக்கும்விதமாகவே செங்கோல் கதைகள் பரப்பப்பட்டன என்றால் மிகையில்லை. தமிழ்நாடு அரசு அதை முறியடிக்கும்!

## :ப்ளாஷ்பேக்





கணேசன்

### மகிழ்வித்து மகிழ்ந்தவர்!

கலைஞர் தீட்டிய திட்டங்களால் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த நான், ஆசிரியராகவும் பின்னாட்களில் தலைமை ஆசிரியராகவும் பணியாற்றினேன். பணி ஓய்வு பெற்ற பிறகு, அவரை நேரில் சந்தித்து முதலமைச்சர் நிவாரண நிதி வழங்க வேண்டும் என்ற நோக்கத்தோடு அவரது 87-வது பிறந்தநாளில் கோபாலபுரம் இல்லத்தில் நேரில் சந்தித்து நிதி வழங்கினேன். அதைப் பெற்றுக் கொண்ட அவர் “என்னய்யா... முதலமைச்சருக்கே நிவாரண நிதியா” என்று நகைச்சுவை ததும்பக் கேட்டதும் நானும் சிரித்தேன். தொண்டனை மகிழ்வித்து மகிழ்ந்தவர் கலைஞர்.

**-அனவயல் ச.கணேசன்,**
**தலைமைக் கழகப் பேச்சாளர்,**
**புதுக்கோட்டை மாவட்டம்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்பவேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600 018. வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல் youthwing@dmk.in


## கருவூலம்

### கலைஞர் சஸ்பென்ஸ்!

**1967-ஆம் ஆண்டு தேர்தலில், கலைஞர் போட்டியிடுவது குறித்து, வேட்பாளர் பட்டியல் அறிவிக்கப்படும்வரை முடிவாகவில்லை. கழகத்தின் மற்ற வேட்பாளர்களுக்காக தமிழ்நாடு முழுவதும் தேர்தல் பிரச்சாரம் செய்ய வேண்டும் என்பதே கலைஞரின் எண்ணமாக இருந்தது. கலைஞர் தேர்தலில் போட்டியிடுவாரா, மாட்டாரா என்பதை எதிர்க்கட்சிகள் ஆர்வமாக கவனித்துக் கொண்டிருந்தன. இறுதியாக, சென்னை சைதாப்பேட்டை தொகுதியின் வேட்பாளராக அறிவித்தார் பேரறிஞர் அண்ணா. தேர்தல் நிதி மற்றும் பிரச்சாரக் கருவிகளைப் பிரித்து வழங்கவும், அண்ணாவின் நாடாளுமன்றத் தொகுதி வேலைகளைப் பார்க்கவும், கலைஞர் சென்னையில் இருக்க வேண்டும் என்பதால், சைதாப்பேட்டை தொகுதியில் போட்டியிட வைத்தார் அண்ணா.**

---

## திராவிடத்தால் வாழ்கிறோம் 134




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2021-2023.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2021-2023 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by R.N.Murugan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.